பாடம் – 5

# தண்ணீர் ஞானஸ்நானம்
# WATER BAPTISM

நம்மில் ஒருவர் கூட இரட்சிப்படைய தகுதி யில்லாதிருந்தும் நாம் எல்லாரும் இரட்சிப்படைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். (2பேதுரு 3:9) இரட்சிப்பை பெறத்தக்கதாக நற் கிரியைகளை ஒருவரும் செய்ய முடியாது. மாறாக நம் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறத்தக்கதாக தேவன் நிர்ணயித்த சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இது, அவர் மீது விசுவாசம் வைத்தலும், பாவங்களிலிருந்து மனந்திரும்புதலும், இயேசு வை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடு தலும், ஞானஸ்நானத்திலேயே கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்படுதலும் உள்ளடக்கும். இந்த நேரத்திலேயே இயேசுவின் இரத்தம் நம்முடைய பாவங்களைக் கழுவுகிறது.

அநேக மத அமைப்புகள், மற்ற எல்லா நிபந்த னைகள் (விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை) அனைத்தையும் ஏற்றுக் கொள்வார்கள்; ஆனால் ஞானஸ்நானத்திற்கும் இரட்சிப்பிற்கும் சம்பந்த மில்லை என்று சொல்லுவார்கள். இப்பாடமானது இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் என்றும் அது ஏன் அவசியம் என்றும் கூறுகின்றது. இதுவரை நாம் படித்த பாடங்களிலிருந்து, இரட்சிப் படைவதற்கான வழிமுறையில், முதலாவது விசுவாசத்தை உண்டுபண்ண வேத வாக்கியங் களை கேட்க வேண்டும் என தெளிவாக பார்த் தோம்.

ஆனால் ஒரு மனிதன் எந்த நேரத்தில் தன் பாவங்களில் இருந்து கழுவப்படுகிறார்? ஒரு மனிதன் எப்பொழுது தேவனை நம்புகிறானோ அப்பொழுதே இரட்சிக்கப்படுகிறான் என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர், மனந்திரும்பும்போது அல்லது இயேசுவின் தெய்வீகத்தை அறிக்கை செய்யும்போதே இரட்சிப்பு வருகின்றது என்கின்றனர். மனிதர்கள் (நேர்மையான / நல்ல மனிதர்கள்) சொல்வது முக்கியமல்ல. வேதாகமம் என்ன போதிக்கின்றது?

நாம் 4வது பாடத்தில் பார்த்தது போல, பேதுரு பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெறும் படி ஜனங்களுக்குப் போதித்தார். இரட்சிப்பைப் பெறுவதற்கான (ஆரம்ப) வழிமுறை ஞான ஸ்நானத்தில்தான் நிறைவு பெறுகிறது.

திருச்சபையை துன்பப்படுத்தி, பின்பு பவுலாக மாறிய சவுலைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்களை துன்பப் படுத்திய பின், தமஸ்குவிலும் பிரச்சனையை உண்டுபண்ண அவர் பிரயாணம் பண்ணினார். வழியிலே அவர் பார்வையிழந்தார். மேலும் இயேசு வானத்திலிருந்து அவரிடம் பேசினார். தான் துன்புறுத்திய இயேசு, தேவனுடைய குமாரன் என்று பவுல் அப்போது உணர்ந்து கொண்டார். (அப். 9:4-6) சரி அவர் இந்த நேரத்திலே உடனே இரட்சிக்கப்பட்டு விட்டாரா?

சவுல் மிகவும் மனந்திரும்பியிருந்தார். அதனால் அவர் 3 நாட்கள் எதையும் சாப்பிடவோ குடிக்கவோ இல்லை. (அப். 9:9) அவர் தன் நேரத்தை ஜெபிப்பதிலேயே தொடர்ந்து செல விட்டார் (அப். 9:11). இதில் ஏதாவது அவரை பாவத்திலிருந்து இரட்சிக்க முடிந்ததா? இல்லை. அனனியா அவரிடம் வந்தபொழுது கூட, இன்னும் அவரிடம் பாவம் இருந்தது. ஒருவர் உபவாசம் இருப்பதினாலோ, ஜெபம் செய்வதினா லோ, செய்த தவறுக்காக வருத்தப்படுவதினாலோ இரட்சிக்கப்பட முடியும் என்றால், இதற்குள் சவுல் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா?

ஆனால் அனனியா அவரிடம் இப்படிக் கூறுகிறார், ''இப்பொழுது நீ தாமக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்'' ஆகையால் சவுலினுடைய பாவங்கள் ஞான ஸ்நானம் பெற்றபின்தான் முழுவதுமாக கழுவப் பட்டன. அப்படியாகத்தான் இரட்சிப்பின் வரிசை நிறைவானது.



இயேசு இந்த செயலை ஒரு சரீர பிறப்புடன் ஒப்பிடுகிறார். ஒரு குழந்தை தன் தாயினுடைய கருவிலே உருவானபின், வ ள ர வேண் -டும்; மேலும் குழந்தை பிறந்தபின் அது உயிரோடு இருக்க வேண்டும். குழந்தை பிறந்த பின் வாழ்வின் முக்கிய காரியங்களை அதற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தை (''விதை'' என்று லூக். 8:11ல் சொல்லப்படுகிறது) ஒருவருடைய இருதயத்தில் விதைக்கப்படும்போது, அதை விளங்கிக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிய முடிவெடுப்பதற்கு சில காலம் செல்லும். ஒருவர் ஞானஸ்நானம் பெற்றவுடனே, அவர் மறுபடியும் பிறந்து விடுகிறார் (ஒரு ஆவிக்குரிய பிறப்பு). இந்த சத்தியங்களை இயேசுவே நிக்கதேமு என்ற ஒரு மனிதனிடம் கூறினார், ''ஒருவர் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாக வே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' என்று இயேசு அவனிடம் கூறினார். (யோ. 3:5)

''புதிதாக பிறக்கின்ற'' வழிமுறையிலே ஞானஸ்நானம்தான் கடைசிப் படியாகும். பிலிப் பிலிருந்த சிறை அதிகாரிக்கு நடுராத்தியிலே தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்டது. (அப். 16:25) இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவர் கேட்டபொழுது, சவுல் (தற்பொழுது அப். பவுல்) பதிலாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித் தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்தில் தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய காயங் களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனை வரும் உடனே ஞான ஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் அவர்களுக்குப் போஜனங் கொடுத்து தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்'' (அப். 16:31-34)

வேதவசனத்தை கேட்பது எவ்வளவு முக்கிய மென்று பாருங்கள்; ஏனென்றால் அந்த சிறை அதிகாரி நடுராத்திரியில் அவனுடைய வீட்டாரனை வரையும் பவுல் கூறும் வசனத்தைக் கேட்கும்படி எழுப்பிவிட்டார். பவுல் கூறியவற்றில் ஞானஸ் நானமும் அடங்கியிருக்கும். அது மாத்திரமல்ல, அவர்கள் இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இல்லை யென்றால், அந்த நடுராத்திரியில் இரண்டுங் கெட்ட நேரத்தில் அவர்கள் ஞானஸ்நானம் எடுத் திருக்க மாட்டார்களல்லவா? பாருங்கள்! ''தேவனில் விசுவாசம் வைத்தபின்'' அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு மகிழ்ச்சியாயிருந்தனர்.

அடுத்ததாக, நாம் எத்தியோப்பிய மந்திரியைப் பற்றி கவனிப்போம்.

''அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்.

இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.'' (அப். 8:35-36)

இங்கே பாருங்கள்! இயேசுவைப் பற்றி சரியாக பிரசங்கித்தவுடன் அடுத்து ஞானஸ்நானத்தைப் பற்றி தான் சொல்லப்பட்டுள்ளது. இயேசுவைப் பற்றி பிரசங்கிக்கப்பட்டபின், யார் ஒருவரும் ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதற்கு இதைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாது. அதாவது, ''கிறிஸ்துவை போதிப்பது'' என்பது ஒருவருடைய பாவங்களிலிருந்து அவர் எப்படி விடுதலை பெற முடியும் என்பதைக் கூறுவதாகும். அது பாவமன்னிப்பிற்காக, ஞானஸ்நானம் பெறுவதையும் உள்ளடக்குகின்றது.

சரி, இதைக்குறித்து வேதாகமம் இனிமேல் விளக்கமளிக்கட்டும். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படி யாதவர்கள் அழிந்துபோவார்கள் என்று நமக்குத் தெரியும். (2தெச. 1:8) ஆனால் ''சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது'' என்றால் என்ன? சுவிசேஷம் என்பது - கிறிஸ்துவினுடைய பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் (1கொரி. 15:1-4) நாம் அதற்கு எப்படி கீழ்ப்படிய முடியும்? நாம், அதற்கு ஒப்பனையான ஒரு போதனைக்குக் கீழ்ப்படி கிறோம் (ரோ. 6:17-18). நாம் பாவத்திற்கு மரிக்கிறோம். இயேசுவின் மரணத்திற்குள்ளாக, இயேசுவுடன் கூட நாம் ஞானஸ்நானத்திலேயே அடக்கம் பண்ணப்படுகிறோம். நாம் ''புதிய வாழ்வு'' வாழும்படியாக வெளியே எழுந்திருக்கி றோம் (ரோமர்.6:3-7). இப்படித்தான் ஒரு மனிதன் ''சுவிசேஷத்திற்கு ஞானஸ்நானத்திலே'' கீழ்ப்படிகிறார்.

அநேக மதப்பிரிவுகள் ஞானஸ்நானத்திற்குப் பதில் ''தெளிப்பதை'' மாற்றுகின்றனர்; ஆனால் அடக்கம் என்பது ஒரு மனிதன் முழுமையாக மூடப்படுவதையே குறிக்கின்றது. ஞானஸ்நானம் பெற விரும்பிய எத்தியோப்பிய மந்திரியை நினைத்துப் பாருங்கள்? இப்படித்தான் இது நடந்தது.

''இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான்'' (அப். 8:38,39)

அப்படியானால் ஞானஸ்நானம் என்பது, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவின் பெயரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தவர்களுக்கே உரியதாகும். அது மூழ்கி (முழுவதுமாக தண்ணீரால் மூடப்பட்டிருத்தல்) பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெறுவதாகும். மறுபடியும் பிறக்கின்ற செயல் முறையில் இது கடைசி நம்பிக்கையாகும். உங்களில் யாராவது ஞானஸ்நானம் பெறாமல் இருப்பீர்களானால், இரட்சிப்பைக்குறித்த இந்த பகுதிக்கு இப்பொழுது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.